1971 டிசம்பர் 18]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) 1970-71-ம் ஆண்டில் உணவு தானியங்களின் உற்பத்தியின் அளவு 70·30 லட்சம் டன்களாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் விபரம் வருமாறு :

	உற்பத்தி லட்சம் டன்கள்
(1) அரிசி	53.03
(2) சிறுதானியங்கள்	16.03
(3) பயறு வகைகள்	1.24
	70.30

Small Land Owners Association at Thungapuram

* 584 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) whether the Hon. the Chief Minister has received a petition, dated nil from the சிறு நில விவசாயச் சங்கத் தலைவர் Thungapuram, Perambalur taluk ; and

(b) if so, the details thereof and the action taken tnereon ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லே, ஐயா. விசாரணை செய்ததில் சிறு நில விவசாயிகள் சங்கம் என்ற பெயரில் துங்கபுரத்தில் ஒரு சங்கம் இருப்பதாகத் தெரியவில்லே.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லே.

Dr. H. V. HANDE : Is it a fact that some request was sent up from the taluk of Perambalur requesting the Government to give some rebate with regard to the various loans that they were having, because the particular areas in Perambalur taluk were declared as drought acected ? If so, will this Government consider the request of the persons who met the Government or sent petitions or written to the Government and see that the arrears of payments are all postponed for another one or two years of at least part of it is postponed?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, துங்கபுரம் சிறு நில விவசாய சங்கத் தலைவரிடம் இருந்து இங்கே குறிப்பிட்டது போல மனு ஒன்றும் வேளாண்மைத் துறைக்கு வரவில்லே. வருவாய்த் துறை, மற்றும் கூட்டுறவுத் துறைக்கும் குறிப்பிட்ட மனு வரவில்லே என்று தெரிவித்துள்ளார்கள். சிறு நில விவசாயச் சங்கம் என்ற பெயரால் துங்கபுரத்தில் ஒரு சங்கமும் இல்லே என்று பெரம்பலூர் வட்டாட்சியர் அறிவிப்பதாக திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகிறுர்.

1971 டிசம்பர் 18]

விளக்குகள் போடவில்லை. அதுசம்பந்தமாக அரசாங்கம் என்ன முடிவு செய்ய இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப்பற்றி நீங்கள் எலெக்ட்ரிசிடி போர்டு பட்ஜெட் மீதான விவாதத்தின்போது பேசியதாக அறிகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, எந்தெந்தத் தேதிகளில் எந்தெந்தக் கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்படும் என்பதைப்பற்றி பேரவையில் குறிப்பிட்டேன். அந்தச் சமயத்தில் கனம் உறுப்பினர் அவையில் இல்லை.

Number plates in cars.

* 590 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the car number plates in Tamil Nadu will be changed shortly to both English and Tamil; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தற்போது இல்லை.

(இ) வினாவிற்கிடமில்லை.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கார்களின் இலக்கங்களைத் தமிழில் எழுத வேண்டுமென்ற யோசனையை இந்த அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தியிருக்கிறதா? அகில இந்திய போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில் இது எடுத்துக் கூறப்பட்டதா? அதுபற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அகில இந்திய போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில், கார்களின் இலக்கங்களை வட்டார மொழியிலும் ஆங்கிலத்திலும் இலக்கப் பலகைகளில் எழுத வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் டெல்லி மாநகராட்சியின் பொறுப்பு ஜனசங்கத்தினர் வசம் இருக்கிறது. டெல்லி மாநில அமைச்சர் மட்டும், இந்தி ஆட்சி மொழியாக இருக்கிற காரணத்தால் இலக்கப் பலகை இந்தியில் எழுதினால் போதும் என்று குறிப்பிட்டார். பெரும்பான்மையான மாநில அமைச்சர்கள் வட்டார மொழியிலும் ஆங்கில மொழியிலும் இருந்தால், அது வெளிநாட்டுப் பயணிகளுக்குக்கூட வசதியாக இருக்கும் என்று விவாதித்து முடிவு எடுக்கப்பட்டது. முடிவுகள் இன்னும் எங்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை, அறிவிக்கப்படவும் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, அப்படி முடிவு தெரிந்தபின்னர் இரண்டு மொழிகளிலும் பலகை எழுத வேண்டுமென்று இந்த அரசு கட்டாயப்படுத்துமா? அல்லது இப்போது இருக்கிற ஏற்பாடே போதும் என்று இருக்குமா?